தேதி : 25.07.2025

Spl.C.C. : 1/2022

PW. : 2

பெயர் : திரு.கருணாகரன்

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25th July 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(*சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பட்டா எண்.196, 197 ஆகிய இரண்டு பட்டாக்களையும் எனது தந்தை பெயரில் இருந்து எனது பெயருக்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 பட்டாக்களில் ஒரு பட்டாவில் எனது தந்தை பெயர் கருப்பையா என்றும் மற்றொரு பட்டாவில் கருத்தையா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தையாருக்கு மீனாட்சி என்ற முதல் மனைவியும், கருப்பாயி என்ற

இரண்டாவது மனைவியும் உள்ளனர் என்றால் சரிதான்.

2. எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டி e-Sevai மையத்தில் விண்ணப்பித்ததற்கு ஆதாரமான ஒப்புகைசீட்டைநான் போலிசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். நான் பட்டா மாறுதல் சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலரை நான் ஐயங்கார் பேக்கரியில் சந்தித்து கேட்டேனா என்றால் ஆமாம், அப்போதுதான் லஞ்சமாக ரூ.4000/- கேட்டார். புகாரை நான் கைப்பட எழுதிக் கொடுத்தேனா என்றால் இல்லை, வீட்டிலிருந்து தட்டச்சு செய்தே கொண்டு சென்றேன்.

3. புகாரில்(அ.த.சா.ஆ-2) அலுவலகத்தில் வைத்துதான் என்று எதிரி பணம் கேட்டார் என்றும் பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் மன வருத்தத்துடன் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். இந்த சம்பவத்திற்கு பின்னீடு வந்த கிராம நிர்வாக அலுவலர் எனது பட்டா மாறுதல் விண்ணப்பத்தை பரிசீலிக்க முடியாது என்று கூறி வட்டாட்சியரிடம் மேற்படி கோப்பு வைக்கப்பட்டு எனது மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை பெயர் இரண்டு விதமாக இருந்த காரணத்தினால்தான் எதிரி எனது பட்டாமாறுதல் விண்ணப்பத்தினை பரிசீலிக்க மறுத்துவிட்டார்

என்றால் சரியல்ல, எதிரி அவ்வாறான தகவலை என்னிடம் சொல்லவில்லை. என்னிடம் எதிரி லஞ்சப்பணம் கேட்காமலேயே எதிரி எனது விண்ணப்பத்தை மறுத்த காரணத்தினால் நான் எதிரியை பழிவாங்க வேண்டி பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல,

4. எதிரி என்னிடம் லஞ்சப்பணம் எதுவும் கேட்டகவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசில் பொய் புகார் கொடுத்து எதிரி கண்மாய் கரை அருகே பஸ் நிறுத்தில் நின்று கொண்டிருந்தபோது நான் அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே அவரது சட்டைப் பையில் பணத்தை வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. போலிசார் அந்த பணத்தை எடுக்க சொன்னதன் காரணத்தினால்தான் எதிரி அவரது சட்டைப் பையில் இருந்த பணத்தை கையால் எடுத்துக் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்து ITI படித்துள்ளேன்.

5. சம்பவத்தன்று நான் போலிசாருடன் சென்ற போது கிராம நிர்வாக அலுவலகத்தில் எதிரி இல்லாததால் எதிரிக்கு அலைபேசி மூலம் தகவல் சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எதிரியின் அலைபேசி எண் என்ன என்றால் தற்சமயம் ஞாபகமில்லை. சம்பவத்தன்று நான் எதிரியின் தொலைபேசி எண்ணை

போலிசாரிடம் கூறினேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவத்தன்று எதிரியை அழைக்கவும் இல்லை, நான் அழைத்ததன் அடிப்படையில் எதிரி ஐயங்கார் பேக்கரிக்கு வரவும் இல்லை என்றால் சரியல்ல. அவர் எதார்த்தமாக பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்து எதிரியின் சட்டைப் பாக்கெட்டில் பணத்தை திணித்து வைத்தேன் என்றால் சரியல்ல.

6. ஐயங்கார் பேக்கரிக்கு எதிரே இருக்கும் பேருந்து நிறுத்தம் சிவகங்கைக்கு செல்லும் பேருந்துகளின் நிறுத்தமாகும் என்றால் ஆமாம். அதற்கு எதிரே உள்ள பேருந்து நிறுத்தம் என்பது சாலிகிராமம்–R.S.மங்கலம் செல்லும் பேருந்து நிறுத்தம் என்றால் சரியல்ல. கல்லல் செல்வதற்கான பேருந்து நிறுத்தம் என்று தனியாக எந்த பேருந்து நிறுத்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் எதிரியை அழைத்ததன் பேரில் எதிரி ஐயங்கார் பேக்கரிக்கு வந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

7. எதிரி என்னிடம் லஞ்சப்பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டதாகவும், நான் ரூ.4000/– கொண்டு வந்ததாக சொன்னேன் என்று சொல்லியிருப்பதும் தவறானது என்றால் சரியல்ல. அந்த பகுதி

கடைகள், ஆள் நடமாட்டம் அதிகமான பகுதி என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என்னிடம் எந்த லஞ்சப்பணமும் கேட்கவில்லை என்றாலும் எனது பட்டா மாறுதல் விண்ணப்பத்தினை எதிரி பரிந்துரைக்க மறுத்த காரணத்தினால் எதிரி மீது நான் பொய் புகார் கொடுத்து அதனடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.07.25 18:03:55 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.